தமிழ் யோக சித்தர் ஓலைச்சுவடிப் பொக்கிஷம்

The Treasure Trove of Tamil Yoga Siddha Manuscripts

தொகுப்பு:
பேராசிரியர் முனைவர் T.N. கணபதி
முனைவர். கரு. ஆறுமுகம்
திரு. G. உத்திராடம்

விளக்கவுரை:
பேராசிரியர் முனைவர் T.N. பிரணதார்த்திஹரன்

தமிழ் யோக சித்தர் ஓலைச் சுவடிகள்
- ஒரு அரும்பொருட் புதையல்

A Treasure - Trove of the Tamil Siddha Manuscripts

(Hitherto unpublished poems)

Contents

Foreword
By Marshall Govindan 5

Foreword
By Professor Dr. T.N. Ganapathy, 11

தமிழ் யோக சித்தர் ஓலைச் சுவடிகள்
(ஒரு அரும்பொருட் புதையல்) 32

Foreword

By Marshall Govindan

I am happy to introduce the reader to this Tamil language publication, *Shiva Shakti Yoga: the Collected Poems of the Eighteen Tamil Yoga Siddhars.* It is the result of efforts by several scholars over the past twelve years. It is also the latest product of the Yoga Siddha Research Project, which since the year 2000, has been sponsored jointly by Babaji's Kriya Yoga Order of Acharyas Inc., Canada and Yoga Research and Education Centre, and Foundation, USA and Canada. The aim of the project was to undertake on a grand scale to locate all the unpublished texts by the Tamil Yoga Siddhars and publish them with critical annotations. Until now no serious study had been made of the Tamil Siddhars in a systematic and comprehensive manner. No serious attempt had been made to translate or to write commentaries on the literary works of the Tamil Yoga Siddhars. This project has filled this long-felt gap.

Around 1961, Kriya Babaji Nagaraj gave to my late guru Yogi S.A.A. Ramaiah (1923 2006) the solemn task to gather the palm leaf manuscripts of the 18 Tamil Yoga Siddhars, and to preserve, transcribe and publish them. During the 1960's Yogi Ramaiah wandered all over Tamil Nadu collecting and carefully preserving them against destruction by white ants. In 1968 he published *Songs of the 18 Yoga Siddhas*, a small anthology of these in their original Tamil language, with English language commentary, illustrated with many photographs associated with the 18 Tamil Siddhars, and numerous illustrations. From 1979 to 1982 he published the

collected works of Babaji's guru, the Siddhar Boganathar, in their original Tamil, in three volumes, nearly 1,800 pages in length. His work greatly inspired me to write my book *Babaji and the Eighteen Siddha Kriya Yoga Tradition* (1991) now published in nineteen languages, and to undertake the Yoga Siddha Research Project. In 1999, as his student of 18 years, and having founded in 1997, Babaji's Kriya Yoga Order of Acharyas, to sponsor the above described research and publishing activities , I devised a research plan in four parts.

The project included four studies. Three of the studies, , have been completed, and resulted in six publications written by a team of scholars, and lead by the project Director, Dr. T.N. Ganapathy, Ph.D.

Study number 2, "Translation into English with Commentary and Publication of Selected Manuscripts related to the Tamil Yoga Siddhas." This study has resulted in the publication of *The Yoga of Siddha Avvai*, by Dr. S.N. Kandasamy, Ph. D. ,and the *Tirumandiram*. Much more is expected from this study as we identify and select the "gems" among the manuscripts copied and transcribed in Study number 1.

Study number 3, "Translation with Commentary of an Anthology of Selected Works of the 18 Siddhas," began in the year 2000, and with the collaboration of several scholars and yogis, it has been completed with the release of *The Yoga of the 18 Siddhas: An Anthology*.

Study number 4, "Translation with Commentary of Selected Poems on Yoga by Siddhar Boganathar," resulted in the publication, in July 2003, of volume 1 of *The Yoga of Siddha Boganathar*, (also translated and published in German and translated and published as an electronic book in Spanish),

and in 2005, with the publication of volume 2. It is based upon entirely upon the mammoth work of Yogi Ramaiah, cited above, *Bogar Kanda Yoga*. At a later date, we hope to publish Boganathar's poem of 7,000 verses, and other works by this Siddha, in subsequent volumes.

The remaining study, "**Study number 1: An Inventory and Preservation in Magnetic Format of the Manuscripts Associated with Yoga contained in Libraries and Private Collections of Tamil Nadu,"** has had as its purpose, to identify and preserve in computer accessible format all of the palm leaf manuscripts of the Tamil Siddhars related to Yoga (but not on medicine) from various libraries and private collections. Dr. T.N. Ganapathy, the project director, and Dr. KR Arumugam, visited many manuscript libraries beginning in the year 2000, and obtained permission from several of them to copy onto electronic media their collections of Siddhar's manuscripts. Dr. Arumugam assisted by Sri Senthil Vadivalagan copied these onto CD Roms all of the Siddhar Manuscripts related to Yoga from the Government Oriental Manuscripts Library (GOML), Chennai, the Adyar Library, Chennai, and the Kerala University Manuscripts Library, Tiruvanathapuram. The number of works copied from the GOML was 357, the number of folios: 11,212, the number of verses: approximately 45,000. In the case of Adyar Library we have gotten photocopies of 85 Siddha Yoga manuscripts including 1,366 folios, and 7,000 verses approximately. In Kerala University photocopies of five Siddha Yoga manuscripts have been obtained. In Kerala University we are fortunate to have a mutilated manuscript on the history of the Siddhas called *Jnana-bodagam*. Unfortunately, the chief librarian of the Tamil University at Tanjore refused permission to make copies of the large collection of Siddhar manuscripts

there, despite repeated requests. Nor were they able to obtain permission to copy the large collection of Siddhar manuscripts held by the late Yogi S.A.A. Ramaiah in his Kanadukathan ashram. It is hoped that others, will be able to do so eventually, to ensure the preservation and accessibility of these valuable manuscripts.

The above mentioned manuscripts were subsequently transcribed into modern Tamil by Sri G. Uthiradam, M.A., M.Phil, Dip. in Manuscriptology, and Dip. in Epigraphy, and the correctness of the transcription has been scrutinized by the well-known scholar Sri. P. Subramaniam, who is a Ph.D. in Manuscriptology, a rare scholarship indeed. The present guide book, *Shiva Shakti Yoga: the Collected Poems of the Eighteen Tamil Yoga Siddhars* has being completed by Dr. T.N. Pranatharthiharan, Ph.D. All of these transcribed manuscripts are included on CD Roms which are inserted in an envelope in the rear cover of this publication.

Dr. T.N. Pranatharthiharan, is the Professor and Head of the Tamil Research Centre, American College, Madurai. With an M.A. (Tamil), an M.A. (English) and a M.A. and Ph.D in Philosophy, and the experience of translating more than a dozen books from English to Tamil, Tamil to English and Sanskrit to English, he is well qualified to write this annotated bibliography of the poems in this collection. It will help the reader to identify the subject matter of each poem, and it will serve as the basis for further research and study by both lovers of Siddha poetry and scholars alike. He has also translated for this publisher *The Voice of Babaji: Trilogy on Kriya Yoga* into the Tamil language (2010).

Dr. T.N. Ganapathy, the Project Director, was Post-Graduate Professor & Head, Department of Philosophy, RKM

Vivekananda College, Chennai, and a visiting professor of the Sathya Sai Institute of Higher Learning, Prasanthi Nilayam, Andhra Pradesh. As a result of his Research Fellowship, the Indian Council of Philosophical Research, New Delhi, published book, *The Philosophy of the Tamil Siddhas*. He is also the author of *The Yoga of Boganathar* (2003 and 2005)in two volumes, and co-author of *The Yoga of the Eighteen Siddhas:an Anthology* (2005), and *The Yoga of Tirumular: Essays on the Tirumandiram* (2008). He was also contributor to, and chief editor of the English translation and commentary of the *Tirumandiram* in ten volumes (2010). The above works are published by Babaji's Kriya Yoga Order of Acharya, Inc.

Dr. KR. Arumugam, Research Associate, has post-graduate and doctorate degrees in philosophy and Tamil Literature. He was a General Fellow of the Indian Council of Philosophical Research, New Delhi. His project was *The Social Concern of the Tamil Siddhas*. He is a visiting faculty in the Sacred Heart Seminary, Poonamallee, Chennai. He is the co-author of *The Yoga of Tirumular: Essays on the Tirumandiram* (2008). He contributed to the translation and commentary of the *Tirumandiram* (2010). He translated the book *Babaji and the 18 Siddh Kriya Yoga Tradition* from English to Tamil.

(1923 to 2006). This project had its origins The first part, Study number 1, is described above. The three other parts were:

I would like to encourage the reader to study the above publications as references, in order to more fully appreciate and understand the collected poems in this present publication. I would also like to encourage Tamil scholars to write commentaries on these collected poems and to continue to identify, preserve, transcribe, translate and publish the

writings on Yoga of the Eighteen Tamil Yoga Siddhars, in particular, those which we were not allowed to copy in electronic format in the manuscript libraries and private collections which we have missed. The wisdom teachings within the poems of the Yoga Siddhars are among the greatest in the Tamil language, and a great gift to humanity. As the foremost Yoga Siddhar, Tirumular has written: *May the bliss I have enjoyed be shared by everyone.*

Marshall Govindan
October 27, 2012

முன்னுரை

Professor Dr. T.N. Ganapathy,
Director, Tamil Yoga Siddha Research Centre,
"Rajkamal" 45, 4th Avenue, Ashok Nagar,
Chennai - 600 083.
Ph : 044-24897396

1. நுழையும் முன்னே :

இதுவரை வெளிவராத தமிழ் யோக சித்தர் சுவடிகள் - ஒரு அரும் பொருட் புதையல் என்ற இந்த நூல் தோன்றுவதற்குக் காரணமான பின்புலத்தைச் சற்று எடுத்துக் கூறுவோம்.

2000 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் இறுதியில் ஒரு நாள் எனக்குத் திரு. வால்டர் நீலகண்டன் என்கிற அமெரிக்கரிடமிருந்து ஒரு செய்தி கணிணி மூலம் வந்தது. அதில் என்னைப் பற்றியும் என் ஆங்கில நூலான The Philosophy of the Tamil Siddhas (New Delhi, The Indian Council of Philosophical Research, 1983) மூலம் என்னுடைய தமிழ் சித்தர் ஆராய்ச்சி பற்றியும் அறிந்து கொண்டதாகவும், அதனைத் தொடர்ந்து மேலும் தமிழ்ச் சித்தர்கள் பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவதற்கு Kriya Yoga Order of Acharyas, St. Etienne de Bolton, Quvbec, Canada என்ற அமைப்பின் தலைவருமாகிய திரு மார்ஷல் கோவிந்தன் என்கிற கோவிந்தன் சத்சித் ஆனந்தா என்ற கனடா நாட்டைச் சார்ந்த அமெரிக்கர் விரும்புவதாகவும், இதற்கு என்னுடைய ஒத்துழைப்பும், பங்கும் தேவை, அவற்றை என்னால் அளிக்க முடியுமா என்றும் கேட்டார். இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த எனக்கு இச்செய்தி, பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இனிப்பாக இருந்தது. உடனே கணிணிலேயே என் முழு சம்மதத்தையும் தெரிவித்தது

மட்டும் அன்றி, அந்த ஆராய்ச்சி திட்டம் பற்றி முழுமையான விவரம் தரும்படியும், இந்தத் திட்டத்தில் எனக்கு உதவியாக என்னுடைய பழைய மாணவரும், தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றவருமான முனைவர். திரு. கரு. ஆறுமுகத் தமிழன் என்பவரை, என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு எனக்குக் கீழே உதவியாளராக நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். அதற்குச் சம்மதம் தெரிவித்து, இந்த திட்டத்திற்கு The Tamil Yoga Research Project என்று பெயரிட்டு, என்னை அதன் இயக்குநராகவும் (Director) நியமித்து, இந்த திட்டத்தில் நான் செய்ய வேண்டிய பணிகளையும் வரைப்படுத்தி ஜூலை, 21, 2000 ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். இந்த திட்டத்தின் அலுவலகம் என் வீட்டு முதல் மாடியிலேயே செயல்படும் என்றும், அதன் அலுவலக விலாசம்: ''ராஜ்கமல்'', 45, 4வது அவின்யூ, அசோக் நகர், சென்னை-600 083'', என்று தீர்மானிக்கப்பட்டு அந்தத் திட்டம் 2000 ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியில் இருந்து செயல்படத் தொடங்குவதற்குப் பதிலாக, எனக்கு உடல்நிலை சரி இல்லாத காரணத்தால், 2000 ம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதியிலிருந்து செயல்படத் தொடங்கியது.

இந்தத் திட்டத்தின் ஆதரவாளாராக (Sponsor), Babaji Kriya Yoga Order of Acharyas, USA ன் தலைவரான திரு மார்ஷல் கோவிந்தனும் (இவர் கானாடு காத்தான் யோகி திரு இராமய்யா அவர்களிடம் காரைக்குடியில் அவருடைய சீடராக இருந்தவர்), மற்றொரு ஆதரவாளராக Yoga Research and Education Centre, California, USA ன் தலைவரான திரு George Feuerstein னும் என்னை Tamil Yoga Research Project (Centre) இயக்குநராகவும் முழுப் பொறுப்பாளராகவும் நியமித்து நாங்கள் மூவரும் ஓர் ஒப்பந்தம் (Contract) செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தப்படி இந்தத் திட்டம் நான்கு வகையான ஆய்வுகளை (Study) உள்ளடக்கியது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துக்களை ஆங்கிலத்தில் உள்ளவாறு அப்படியே

தந்துள்ளேன். இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை வரையறுத்துத் திரு. கோவிந்தன் எனக்கு ஜூலை 21, 2000 அன்று எழுதிய கடிதத்தையும் அப்படியே தந்துள்ளேன்.

2. சித்தர் ஆய்வு பற்றிய ஒப்பந்தம்

To:

Dr. T.N. Ganapathy,

Ashok Nagar, Chennai.

India

July 21, 2000

Dear Dr. Ganapathy

Thank you for your reply dated July 3, 2000 as well as your C.V. and that of your proposed research assistant Mr. Arumugam. I am happy to note that you were associated for many years with the Ramakrishna College in Mylapore and that Arumugam hails from Karaikudi. I am intimately familiar with both areas having lived in both areas since 1972 for about five years.

I have discussed the details of a contract, the content of the studies and the procedures to be followed with Dr. Georg Feuerstein, whose organization is currently co-sponsoring the studies and with Walter Neelakantan. We are ready to move ahead. Below is the draft contract. Please review it and let us know your comments. When it is acceptable to all concerned parties we will all sign it.

Study Number 1: “An Inventory and Preservation in Magnetic Format of the Manuscripts Associated with Yoga

3. செய்து முடித்த சாதனை

மேற்கூறிய நான்கு வகையான ஆய்வுகளையும் தமிழ் யோக சித்தர் ஆராய்ச்சி மையம், பேராசிரியர் முனைவர் தண்டாங்கோரை நடேச கணபதி (T.N. Ganapathy) யை இயக்குநராகக் கொண்டு பத்து ஆண்டுகளில் (2001-2010) நிறைவு செய்தது என்பது ஆராய்ச்சி உலகில் ஒரு சாதனை என்று துணிந்து கூறலாம். இந்தச் சாதனையில் இயக்குநருக்கு உறுதுணையாக நின்றவர் இருவர். ஒருவர் முனைவர் திரு. கரு. ஆறுமுகத் தமிழன் அவர்கள். முதல் ஐந்து ஆண்டுகளில் ஆராய்ச்சி உதவியாளராக இருந்த அவர், தமிழை நன்கு கற்றவர், நல்ல பேச்சாளர் என்ற நிலையிலிருந்து, ஆங்கிலத்திலும் திறமையானவர் என்ற நிலைக்கு உயர்ந்தார். 2005 ஆம் ஆண்டிலிருந்து அவர் துணை இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார். மற்றொருவர், ஓலைச் சுவடிகளைத் தொகுப்பதிலும், அவற்றைப் படிப்பதிலும் நிபுணரான திரு. கோ. உத்திராடம் என்பவர். இவர் இப்பொழுது தமிழக அரசின் செம்மொழித் திட்டத்தில் ஒருபதவியில் இருக்கிறார். இவர்களைத் தவிர இந்தத் திட்டத்தில் முதன் முதலில் வேலைக்குச் சேர்ந்து, இந்தத் திட்டத்தின் மூலம் அலுவலக முறைகளில் பயிற்சி பெற்று, அதில் தேர்ச்சி பெற்று, தங்கள் முன்னேற்றம் கருதி வேறு துறைகளில் வேலைக்குச் சேர்ந்தவர்கள் முறையே திரு. செந்தில் வடிவழகன், திரு. விவேகானந்தன் ஆவர். செந்தில் வடிவழகன் தற்போது USA ல் administrative dept. ல் நல்ல நிலையிலும், திரு. விவேகானந்தன் சென்னையில் ஒரு I.T. நிறுவனத்திலும் வேலை புரிகின்றனர். எங்கிருந்தாலும் வாழ்க.

மூன்றாவது ஆய்வுத் திட்டப்படி ஆராய்ச்சி நூலாக நவம்பர் 2004ல் ஆங்கிலத்தில் வெளிவந்த பாடல் திரட்டு: The Yoga of the 18 Siddhas: An Anthology எனும் நூல். இதற்கு திரு கோவிந்தன் ஒரு முகவுரை எழுதியுள்ளார். இந்தத் தொகை நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியாகிய முன்னுரையில் இரண்டு அத்தியாயங்கள். முதல்

அத்தியாயத்தின் தலைப்பு திரை தூக்கல். இதை முனைவர் T.N. கணபதி எழுதியுள்ளார். இரண்டாவது அத்தியாயம் சித்தர்களின் வாழ்க்கையைப் பற்றியது. இதை T.N. கணபதியுடன் திரு. கரு. ஆறுமுகம் சேர்ந்து எழுதியுள்ளார். இரணடாவது பகுதியில் நந்திதேவர், அகத்தியர், திருமூலர், போகர், கொங்கணர், மச்சமுனி, கோரக்கர், சட்டைமுனி, சுந்தரானந்தர், இராமதேவர், குதம்பைச் சித்தர், கரூவூரார், இடைக்காட்டுச் சித்தர், கமலமுனி, வான்மீகர், பதஞ்சலி, தன்வந்திரி, பாம்பாட்டிச் சித்தர் ஆகியவர்களின் பாடல்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பாடலையும் தமிழில் கொடுத்து, அதற்குரிய எழுத்துப் பெயர்ப்பும் செய்து, அந்தப் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அதற்குரிய கருத்தையும் இறுதியில் விளக்கவுரையும் கொடுத்துள்ளோம். இந்தச் சித்தர் பாடல் மொழிபெயர்ப்புகளையும், விளக்கவுரை களையும் முனைவர் T.N. கணபதி, பேராசிரியர் P.S. சோமசுந்தரம், பேராசிரியர் T.B. சிந்தலிங்கையா ஆகியோர் வழங்கியுள்ளனர். மூன்றாவது பகுதியில், குண்டலினி யோகம், ஆறாதாரங்கள், சித்தர்களின் உடல் பற்றிய கருத்து, பதினெண் சித்தர்களின் சமாதிகள், பழனி ஆண்டவர் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் வெளிவந்த கட்டுரை, 36 தத்துவங்கள், நவகோணச் சக்கரம், பரியங்க யோகம், சமாதி வகைகள், பஞ்சாக்ஷர மந்திரம், எண் பதினெட்டு ஆகியவை பற்றிய பின் சேர்க்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் அரும்பதவுரைத் தொகுதியும், புத்தகப் பட்டியலும், அவதாரிகைத் தொகுப்பு அட்டவணையும் (index) சேர்க்கப்பட்டுள்ளன. (குறிப்பு: ஒரு நூலுக்கு அகரவரிசைத் தொகுப்பு அட்டவணை கொடுக்கும் பழக்கம் பொதுவாக இந்தியப் பதிப்புகளில் இருப்பதில்லை) இந்நூல் மொத்தம் xxxv + 616 பக்கங்கள் கொண்ட ஒரு நூல். இந்த நூல் வெளியிடப்பட்டதும் எங்கள் குழுவில் அனைவருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லி முடியாதது. முதற் குழந்தையைப் பெற்றெடுத்த பெண்மணியின் மனநிலையில்

(பெற்றெடுக்கும் சமயத்தில் இருந்த கடினமான நிலைமையிலும், பெற்றெடுத்த பின் ஏற்படும் மனமகிழ்வு நிலையிலும்) நாங்கள் இருந்தோம் என்றால் மிகையாகாது. இந்த நூல் தமிழில் சித்தர்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல் எங்களையும், முக்கியமாக அதன் ஆசிரியர்களையும், சித்தர் ஆராய்ச்சி உலகிற்கு அறிமுகப்படுத்தியது என்றால் மிகையாகாது.

நான்காவது ஆய்வுத் திட்டப்படி சித்தர் போகநாதரின் பாடல்களில் யோகம் சார்ந்தவற்றை யோகி திரு. இராமையா பதிப்பித்துள்ள ஐந்து பாகங்கள் கொண்ட போகர் கண்ட யோகம் என்ற நூல்களின் தொகுப்பிலிருந்து எடுத்து தமிழ்ப் பாடல்களுடன், அவற்றிற்குரிய எழுத்துப் பெயர்ப்பு, ஆங்கில மொழி பெயர்ப்பு, அதற்குரிய சுருக்கம், இறுதியில் விளக்கவுரை ஆகியவற்றைக் கொடுப்பதுடன் போகரின் வாழ்க்கை வரலாறு, அவருடைய யோகக் கருத்துக்களையும் எடுத்துக் கூறி போகருடன் தொடர்பு கொண்ட இதர விஷயங்களையும் கூறி விளக்கி ஒரு நூலாக வெளியிட வேண்டும்.

இதன்படி The Yoga of Siddha Boganathar என்கிற நூல் இரண்டு பாகங்களாக, முதற் பாகம் 2003 லும், இரண்டாவது பாகம் 2004 லும் வெளியிடப்பட்டன. முதல் பாகத்தில், சித்தர் ஆய்வில் உள்ள சிக்கல்களையும், குண்டலினி யோகம், போகரின் வாழ்க்கை வரலாறு (அவருடைய நூல்களில் இருந்து திரட்டியவை) ஆகியவை பற்றியும் எழுதிவிட்டு, ஞானச் சூத்திரம், சிவயோக ஞானம், சமாதி தீக்ஷை, திருமந்திர ஞானம், ஞான பூஜா விதி, அஷ்டாங்க யோகம், மெய்ஞ்ஞான போதம் என்பவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அவற்றின் விளக்கவுரையும் தரப்பட்டுள்ளது. இந்த நூலின் முக்கியத்துவம் அதன் பின் இணைப்புகளில் உள்ளது. அவற்றில் போகர் கூறிய சித்தர்களின் பிறந்த இடங்களும் அவர்கள் வயதும், அவர்கள் பிறந்த மாதம், நக்ஷத்திரம், அவர்கள் சாதி இவற்றுடன் சித்தர்களின் படங்களும் வெளியிட் பட்டுள்ளன. தவிர சித்தர்கள்

1. அகத்தியர் ஞான தீட்சைச் சுருக்கம் - 5 (6)

நாதாந்த தீட்சை மார்க்கத்தை அகத்தியர் புலத்தியருக்கு உபதேசிக்கிறார். அகரத்தை உகரத்தோடு சேர்த்து சுழிமுனையில் நிற்க வேண்டும். எட்டும் இரண்டுமே வேதாந்த முடிவு.

எட்டும் இரண்டும் சேர்த்தல் என்பதை அப்பினிடம் அப்பு சேர்தல் என்கிறார். பத்து தீட்சை உண்டு. உள்ளே வாயுவை ரவியில் அடக்கவேண்டும். சிவன் பார்வதிக்கு எட்டும் இரண்டும் என்பதை உணர்த்தினார். ‘‘நன்றான பொருளிதுதான் உற்றுப்பாரு’’ என அறிவுறுத்துகிறார் அகத்தியர்.

2. அகத்தியர் ஞான காவியம் - 1

அகத்தியர் புலத்தியருக்குச் சொல்வது போல அமைந்த இந்நூலில் ஐந்தெழுத்து பிரித்துக் கூறப்படுகிறது.

ந - பிரமன் வீடு

ம - மாலின் வீடு

சி - உருத்திரன் வீடு

வ - மயேசன் வீடு

ய - சதாசிவன் வீடு

அ

இதனைத் தீட்சையாகப் பெற்று யோகம் பயின்றால் மோட்சம். இது மகத்தான வித்தை என்று கூறும் அகத்தியர், ஆயிரம் பாடலின் சுருக்கம் இவ்வொரு பாடல் என்கிறார்.

3. அகத்தியர் - 8

அமுதம் இருக்கும் தானம் பற்றிப் பேசுகிறது இந்நூல். மூலத்துள்ளே ஆத்மாவாய் நின்ற கணபதியை வணங்கித் தொடங்குகிறார் அகத்தியர். அமுதம் சிந்தாமல் உண்பதற்கு வகையைச் சொல்கிறார். சத்தியும் சிவமும் சேரும்போது அமுதம் விளையும்.

22. அகத்தியர் ஞானம் - 16

அகத்தியர் புலத்தியருக்கு இங்கு மௌன யோகத்தை உபதேசிக்கிறார். பிராணாயாமம், தாரணை பயின்று சுழிமுனையில் நிற்க வேண்டும். இது வாசி யோகம் (கௌட யோகம், ராச யோகம்). சிவராச யோகம், சுழியின் யோகம் என்பன இதன் வேறு பெயர்கள்.

23. அகத்தியர் சூத்திரம் - 13

வாசியைக் கட்டிச் சுழிமுனையை நோக்க வேண்டும். சோதி தரிசனம் கிட்டும். அப்போது வாதசித்தி உண்டாம். முத்திபெற மூதண்டக்கருவை அறிய வேண்டும். அம்மருந்து செய்முறையை இவண் கூறுகிறார் அகத்தியர். குருவிடம் இதனைக் கேட்டறிய வேண்டும். துலா ராசியில் அமைபவர் குரு. அவருக்கு வாலைசித்தி, வாதசித்தி, ஞானசித்தி ஆகியவை ஏற்பட்டிருக்க வேண்டும். நகாரத்தைக் கண்டறிந்தவன் வாதஞானி. குருவிடம் பழகிச் சோதி தரிசனம் பெற வேண்டும். சோதி கண்டால் வாதம் சித்தி. ‘‘லலாடத்தில் தூங்கு’’ என்று அறிவுறுத்துகிறார் அகத்தியர். அப்போது மௌனம் சித்திக்கும். இதனால் ஞானி ஆகலாம்.

24. அகத்தியர் சுருக்கம் - 18 (19)

ரவிமதியை இணைத்து ஓராண்டு நாடினால், தீபதரிசனம் கிட்டும். சுழிமுனையில் பூசை செய்ய வேண்டும். வாலையின் மூன்றெழுத்தைப் புருவ மையத்தில் வைத்து முனைபூசை செய்தல் வேண்டும். வாசி தன்னில் வாழுவோர் சிவனைக் காண்பர். இவ்வாறு சிவயோகத்தை உபதேசிக்கிறார் அகத்தியர். ஒருமுறை அமுதம் கொண்டால் பத்து நாடிகளும் ஒன்றாகும்.

சுழிமுனை நாடி திறக்க வேண்டும். ஓம்காரமே அப்போது கற்பம் ஆகும். சந்திரமண்டலத்தில் நிலைக்க வேண்டும். ஐந்தெழுத்தைத் தியானிக்கச் சித்தர் தரிசனம் உண்டாம்.

வாசி கண்டு, வழலை மார்க்கம் கண்டவர்கள் நாதவிந்து காணலாகும். வாதத்தின் கரு ‘‘ஐம்பதில்’’

சொல்லப் பட்டுள்ளது. உண்மையை அறிய வேண்டும் என்று உபதேசிக்கிறார் அகத்தியர்.

25. அகத்தியர் ஊழிக்காற்றுச் சூத்திரம் - 10

புலத்தியருக்கு ஊழிக்காற்றின் விவரம் சொல்லுகிறார் அகத்தியர். அதற்கான மருந்தும், மருந்து செய்முறைகளும் இவண் கூறப்படுகின்றன. இந்நூல் முற்றுப் பெறவில்லை. 9 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

26. அகத்தியர் தத்துவக் கூறு (உரை 13 பக்கம்) - 13

திருமூலர் திருமந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு உரைநடையில் பின்வருவன பற்றி இந்நூல் எடுத்துக்கூறுகிறது.

பத்துப் பொறிகள், ஆறாதாரங்கள், அக்கினி சந்திர சூரிய மண்டலங்கள், தசநாடிகள், 14 வாயுக்கள், 6 கோசங்கள், 4 அந்தக்கரணங்கள், கேவல அவத்தை, மத்தியாவத்தை, சகல அவத்தை (அவத்தைத் திரயம்), முக்குணம், மும்மலம், 3 ஏடணை, வாதம் பித்தம், சிலேத்துமம் ஆகிய முக்குற்றம், மூன்று உடம்பு ஆகியவை. இவை 96 தத்துவங்களில் அடங்கும்.

27. அகத்தியர் ஞான காவியம் - 1000

அகத்தியர் புலத்தியருக்குச் சொல்வதாக அமைந்த இந்நூல் சித்த மார்க்கத்தின்படி ஞானத்தை எடுத்துரைக்கிறது. இந்நூல் தரும் முக்கியச் செய்திகள் வருமாறு :

1. பிராணாயாமத்தால் வாசிகட்டும், முத்திக்கு வித்து வாசி. அப்போது 'உம் ஓம் ஸ்ரீம்' என்ற மந்திரத்தை உருப்போட வேண்டும்.
2. ஆறாதாரம் திறக்க தீட்சை தேவை.
3. அகர உகரம் சேர்வதே யோகம். யோகத்தால் ஞானம் கிட்டும். சுழிமுனையில் நிலைக்க உண்மை புரியும்.

4. பிரணவமே கரு. அதிலிருந்தே எல்லாம் உதயமாயிற்று. பிரணவ சமாதி நோக்கியே யோகம் செல்கிறது.
5. கதிர் பிறக்கும் இடம் யோகம். கனல் பிறக்கும் இடம் ஏமம்.
6. மதியிலே பிறந்த யோகம் மனத்திடை அழுத்த சித்தி. பரிதியே படைத்தால் சித்தி. சித்தயோகத்தின் சிறப்பு சுழிமுனையில்.
7. வாசியோகம் உறுதியாகக் கற்பம் உண்ண வேண்டும். அப்போது காயசித்தி, மௌனசித்தி உண்டாம்.
8. ஆறாதார தரிசனம் குருவருளால் ஏற்படும்.
9. யோகத்தின் உறுப்புகளாக முப்பத்திரண்டைப் பகர்கிறார் இங்கு அகத்தியர்.
10. நாதாந்த யோகமே சித்தர் நவில்வது. அதனைச் சாரணைச் சித்தர் யோகம் என்றும் அழைக்கிறார் அகத்தியர். அதுபற்றிப் பல பாடல்கள் விளக்கம் தருகின்றன.
11. வாசி கபாலத்தை நிறைப்பது கபாலயோகம். இது முத்தியைத் தரும்.
12. அவ்வாறே சாமயோகம் என்பதும் விளக்கப்படுகிறது.
13. வாத உப்பாம் முப்பூ யோகசித்தி, வாதசித்தி, காயசித்தி ஆகியவற்றைத் தரும்.
14. போக்கும் யோகம், வியாக்கண யோகம், அனாதை யோகம், யோக சாந்தம் ஆகியவையும் விளக்கப்படுகின்றன.
15. யோக தீட்சை பற்றி விரிவாகப் பேசுகிறார் அகத்தியர்.
16. அறிவறிவானந்த யோகம் என்பதும் விளக்கப்படுகிறது.
17. நயன யோகம் என்பது சுழிமுனையில் அமையும்.
18. அவ்வாறே வாமனைச்சார சித்தயோகமும்.

ருத்திர பீடம், வாலை பூசை, வாலை மந்திரம் யோக சாத்தியம், தேகசித்தம் ஆகியவை பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறது இந்நூல்.

1. குருவருள் தலையாயது.
2. முடிவை அறிந்துகொண்டால் முடியும் தவம்.
3. உள்ளம் பெருங்கோயில், உள்ளே ஒளிவிளக்கு.
4. தற்பரமும் சிற்பரமும் தானதுவே யோகம்.
5. அறிவே சிவமயம்.
6. குருவால் சித்தி கைகூடும்.
7. வெளியில் வெளியாய் ஒன்றாக வேண்டும்.
8. சுழிமுனையில் மாணிக்க ஒளியைக் காணலாம்.

28 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன.

87. சட்டைமுனி நூல் - 30

குரு உபதேசமே முக்கியம். விட்ட குறை இருந்தால் ஞானம் கிட்டும். சிவயோகத்திற்கு எட்டெழுத்து முக்கியம். ஐந்தெழுத்தின் ‘சிவ‘ என்ற இரண்டு எழுத்து முக்கியம். அது வாசியைக் குறிக்கும். வாசியை புருவ நடுவில் நிறுத்த வேண்டும். வாசி நிலைத்தால் காயசித்தி உண்டாம். இவ்வாறு குரு சீடனுக்குச் சொல்வதாக அமைகிறது இந்நூல்.

88. சட்டைமுனி சூத்திரம் -16

நோய் போக லேகியம் ஒன்று சொல்கிறார் சட்டைமுனி. அவர் எழுதிய பஞ்சரத்தினம் என்ற நூலில் ஓர் மெழுகு பற்றிக் கூறியிருக்கிறார். அதை ஒரு மண்டலம் உட்கொண்டால் சுழிமுனையில் சோதி தரிசனம் கிட்டும் என்கிறார்.

‘‘நமசிய வமந’’ என்ற மந்திரத்தை 108 முறை ஓத சித்தர் சாபம் நிவர்த்தி ஆகும் என்கிறார். இவை மகேஸ்வரி அவருக்குச் சொன்னவையாம்.

89. கொங்குணர் வாக்கியம்

ஓங்காரத்தில் பஞ்சபூதங்களும் ஒடுங்கும். அகாரம் பகாரத்தைக் கொள்ளும், உகாரம் மகாரத்தைக் கொள்ளும்,

114. சித்தரந்தாதி உரை (உரை) -66

22 பாடல்களும் அவற்றின் உரையுமாக அமைந்த இந்நூல் வலையின் சிறப்பை எடுத்துரைக்கிறது. வாலையின் சிறப்புகளாக நூல் கூறுவன பின்வருமாறு:

1. பரிபூரண போக்குவரவு அற்ற நெஞ்சமே அவனது திருக்கோயில்.
2. இப்பிரபஞ்சம் முழுதும் அவன் விளையாட்டுக்கு உரிய இடம்.
3. எல்லாத் தெய்வத்திற்கும் அவளே தாய்.
4. வாசியே அவளை உணர உதவும்.
5. ஞானத்தாலே அவளை உணரலாம்.
6. காலம் கடந்தவள் இத்தாய்.
7. நால்வகைப் பதமுத்தியும் அவள் நல்குவாள்.
8. அனுபூதியில் மட்டுமே அவள் கோசாரம் ஆவாள்.
9. அவள் சிவானந்த மகிஷி
10. அவள் அளந்த குரு நாழி நெல் என்பது சிவானுபவம் ஆகும்.
11. எட்டுத் திசையுமாக நிற்பவள் இச்சிவசக்தி.
12. உள்ளக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் அவளை ஞான நாட்டத்தால் உணரலாம்.

115. அண்ட தரிசன நாதாந்தம்

நாதாந்த சாரமாக அமைகிற இந்நூல் 32 விருத்தங்களைக் கொண்டது. ஆறாதாரம், ஊமை எழுத்து, அகாரம், உகாரம், அஞ்செழுத்து, சிவம், சத்தி, நாதம், விந்து ஆகியவற்றை விளக்கி உரைக்கிறது இந்நூல்.

பிள்ளையார் சுழி, ஊமை எழுத்து என்பன அகாரத்தைக் குறிக்கும். ஊமையாம் எழுத்தே நாதாந்த சோதி. சுழிமுனையில்

தமிழ் யோக சித்தர் ஓலைச்சுவடிப் பொக்கிஷம் என்னும் இந்த நூல் இடைச்சங்க காலத்தில் தமிழ் யோக சித்தர்கள் இயற்றிய நூற்றுக்கணக்கான பாடல்களுக்கு ஒரு வழிகாட்டியாகும். ஓலைச்சுவடிகளில் காணப்பட்ட இப்பாடல்களை வல்லுனர்களும் அறிஞர்களும் கொண்ட ஒரு குழு சேகரித்து, படியுரு எடுத்துத் தற்காலத் தமிழில் எழுத்துப் பெயர்த்து அதனைத் திருத்தியுள்ளனர். இந்த வழிகாட்டி சித்தர் பாடல்களில் விருப்பமுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆராச்சியாளர்களுக்கும் மொழிபெயர்ப் பாளர்களுக்கும் யோகம் மற்றும் தந்திரத்தில் விருப்பமுள்ளவர்களுக்கும் ஒரு அரிய பொக்கிஷமாகும்.

1,677 பக்கங்களில் 13,276 பாடல்களைக் கொண்ட குறுந்தகடு இந்நூலின் பின் அட்டையில் இணைக்கப்பட்டுள்ளது.

சித்தர் பாடல்கள் தொகுப்பைப் படிப்பவர்கள் ஒவ்வோரு பாடலின் பொருளையும் எளிதாக அறிவதற்கு முனைவர் திரு.டி.என் பிரணதார்த்திஹரன் அவர்கள் ஒவ்வொரு பாடலின் சாரத்தையும் ஒரு சுருக்கமான முன்னுரையையும் அளித்துள்ளார். அவர் தற்போது தமிழ்நாட்டில் மஞ்சக்குடியிலுள்ள சுவாமி தயானந்தா அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியின் முதல்வராக உள்ளார். இதற்கு முன் அவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் தமிழ் ஆராச்சி மையத்தின் தலைவராகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். கடந்த 37 வருடங்களாக அவர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் ரமண ஒளி என்ற பத்திரிக்கையின் பதிப்பளராகப் பணியாற்றி வருகிறார். 38 நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மற்றும் சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்த அனுபவமும் எம்.ஏ (தமிழ்),எம்.ஏ (ஆங்கிலம்), எம்.ஏ. மற்றும் முனைவர் (தத்துவம்) ஆகிய பட்டங்களையும் பெற்ற திரு ஹரன் அவர்கள் இந்தப்பாடல்களுக்கு முன்னுரை எழுதுவதற்குத் தகுதிவாய்ந்தவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

தமிழ் யோக சித்தர்களின் யோகம் சார்ந்த (மருத்துவமல்லாத) பாடல்களைத் தென்னிந்தியாவிலுள்ள பல நூல்களிலிருந்தும் தனி நபர்களிடமிருந்தும் பெற்று அவற்றை கணினியில் படிப்பதற்கு ஏற்ற விதத்தில் மாற்றி அவற்றை அழியாமல் பாதுகாக்கும் இந்த முயற்சிக்குத் தலைமை தாங்கிய யோக சித்தர் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் முனைவர் திரு.டி.என். கணபதி அவர்கள் இந்த நூலைத் தொகுத்ததுடன் இதற்கு விரி-வான முகவுரையையும் எழுதியுள்ளார். ஓலைச்சுவடியில் உள்ள விஷயங்களை விளக்க, பல இடங்களில் கூடுதலாகச் சில குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிக்குப் பொருளுதவி செய்த, திரு மார்ஷல் கோவிந்தன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பாபாஜியின் கிரியா யோக ஆச்சாரியர்கள் குழுமம் மற்றும் இந்த ஆய்வு முயற்சியில் ஈடுபட்ட வல்லுனர்களின் எட்டாவது வெளியீடு இது.

பாபாஜியின் கிரியா யோகம் மற்றும் வெளியீடுகள்,
செயின்ட் எட்டியன் டி போல்டன், கனடா.
ISBN: 978-1-895383-83-6
யோக சித்தர் ஆராய்ச்சி மையம் வெளியீடு 8